

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

*அ.எண்:299/2015*

*தேதி: 18.12.2015*

# மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூடுதல் நிவாரணத் தொகை வழங்க வேண்டும் தமிழக அரசுக்கு ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ கோரிக்கை

*மழை வெள்ளத்தில் பொதுமக்களைப் போல வணிகர்களும் மிகப் பெரிய பாதிப்பிற்கு உள்ளானார்கள். தரைத்தளத்தில் கடை வைத்து நடத்திய சிறிய, பெரிய வணிகர்கள் அனைவருமே பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.*

*உணவுப்பொருள்கள், மளிகைப் பொருள்கள், எண்ணெய் வகைகள், வணிகத்திற்குரிய உபகரணங்கள் என பல ஆயிரம் கோடி ரூபாய்க்குரிய பொருள்கள் நஷ்டமாகி இருக்கிறது. வணிகர்களுக்கு ஏற்பட்டுள்ள சரியான இழப்புத் தொகையை முழுவதுமாக வழங்குவது சிரமமான ஒன்று தான். இருப்பினும் அரசு குழு அமைத்து இழப்பீடுகளை கணக்கிட வேண்டும்.*

*வெள்ளத்தாலும், மழையாலும் உட்புகுந்த தண்ணீர் வடிந்த பிறகு ஒவ்வொரு சாலையிலும் வணிகர்கள் மழை வெள்ளத்தால் சேதமடைந்த பொருள்களை வணிக உபகரணங்களை, மரச்சாமான்களை அள்ளி சாலை ஓரங்களில்*

போட்டிருந்தவை மலை போல் குவிந்திருந்தன. அதைக் கொண்டே வணிகர்கள் மிகப்பெரிய இழப்பை, நஷ்டத்தை சந்தித்திருப்பதை நாம் உணர்ந்திருக்க முடியும்.

எனவே தற்சமயம் வணிகர் சங்க பேரமைப்பு, பாதிப்பிற்குள்ளான சிறு கடைகள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ50,000/- வழங்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளார்கள். அவர்கள் கோரிக்கையை தமிழக அரசு பரிவுடன் பரிசீலிக்க வேண்டும் என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி,வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்